தீக்கதிர்

09.01.2025

## 70 ஆண்டுக்கு மேலான வசிப்பிடத்தை அகற்றாதே!

# முல்லைநகர் மக்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

மதுரை, ஜன.8-

மதுரை பீ.பி. குளம் முல்லை நகர் பகுதியில் 70 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் மக்களை வெளியேற்றாமல் நிலத்தை வகை மாற்றம் செய்திட வேண்டும். நீதி மன்றத்தை காரணம் காட்டி மக்களை ஒதுக்கும் போக்கை மாவட்ட நிர்வாகம் கைவிட வேண்டும். குடிசை மாற்று வாரியம் ஆய்வு செய்து குடியிருப்பு பகுதிகளை பாதுகாத்திட வேண்டும். ஒரே வடக்கு தாலுகாவில் இரு வேறு நீதிகளை வழங்குவதை கைவிட வேண்டும். வெவ்வேறு நீர் நிலைகளில் நிலங்களை வகை மாற்றம் செய்தது போல் எங்கள் பகுதியையும் வகை மாற்றம் செய்திட வேண்டும் என்று பீ.பி.குளம் முல்லைநகர் குடியிருப்போர் நலச்சங்கம், முன்னாள் ராணுவ குடியிருப்போர் சங்கம், ராஜீவ் காந்திநகர், நேருஜி தெரு, நலச்சங்கம் மற்றும் பொதுமக்கள் மற்றும் அனைத்துக் கட்சி பிரமுகர்களின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் புதனன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருவள்ளுவர் சிலை அருகில் நடைபெற்றது.



குடியிருப்போர் நல சங்கத் தலைவர் ஜெயபால் தலைமை வகித்தார். இதில் **வழக்கறிஞர் ஹென்றி டிபேன், மார்க்சிஸ்ட்** கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு உறுப்பினர் இரா.விஜயராஜன், மாவட்டச் செயலாளர் மா.கணேசன், பகுதிச் செயலாளர் ஏ.பாலு, மாவட்டக் குழு உறுப்பினர்கள் டி.குமரவேல் (மாமன்ற உறுப்பினர்), ஜாஹீர் உசேன், எஸ்.வேல் தேவா, அகில இந்திய பார்வர்டு பிளாக் மாநிலத் தலைவர் பி.வி.கதிரவன், சிஐடியு மாவட்டத் தலைவர் இரா.தெய்வராஜ், தமிழ் தேச மக்கள் முன்னணி தலைவர் மீ.த.பாண்டியன் உள்ளிட்டு நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.